# இந்தியத் துணைத் தூதரகம்

## யாழ்ப்பாணம்

## <u>ஊடக அறிக்கை</u>

### <u>இந்திய கைத்தொழில் கண்காட்சி மற்றும் பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணத்தில் துவக்கம்</u>

யாழ் இந்தியத் துணைத் தூதரகமானது வட மாகாண கைத்தொழில் திணைக்களத்துடனும் யாழ்ப்பாணம் ரோட்டரிக் கழகத்துடனும் இணைந்து வட மாகாணத்தில் சிறு கைத்தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறு கைத்தொழில்களுக்கான தொழிற் கண்காட்சியும் பயிற்சிப் பட்டறையும் என்ற நிகழ்வினை இன்றும் (16.02.2019) நாளையும் (17.02.2019) வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை ஏற்பாடு செய்துள்ளது.

2. இந் நிகழ்வின் தொடக்க நாள் நிகழ்வுகள் இன்று (16.02.2019) காலை 1000 மணி முதல் 1130 மணிவரை சிறப்பான முறையில் இடம்பெற்றது. இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன், வட மகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே சிவஞானம், யாழ் மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனோல்ட், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், பிரதி பிரதம செயலாளர் திருமதி மேகநாதன், யாழ் நோட்டறி கழக தலைவர் திரு பிரஷாந்தன், யாழ்ப்பாண வணிகர் சங்க தலைவர் விக்னேஷ் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கைத்தொழில் திணைக்கள அதிகாரிகள், தூதரக அலுவலர்கள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் தொழில் முனைவோர்கள் உட்பட 400ற்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

3. நிகழ்ச்சியினை நாடா வெட்டி தொடக்கி வைத்த சீ.வீ.கே. சிவஞானம் மற்றும் ஆர்னோல்ட் அவர்கள் தமது சிறப்புரையில் யாழ் இந்தியத் துணைத் தூதரகமானது வடக்கு மாகாண கல்வி மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருகின்றமைக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்ததுடன் இக் கண்காட்சி மிகவும் பயனுடையது என்பதால் பயனாளிகள் இதனை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். றோட்டரி கழக தலைவர் பிரஷாந்தன் அவர்கள் தன்னுடைய உரையில் எமது மக்கள் நிவாரணங்களை பெறுபவர்களாக இல்லாமல் தமது உழைப்பின் மூலம் நிவாரணத்தினை வழங்குபவர்களாக மாற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

4. பல்வேறு சிறுகைத்தொழில்களை மேற்கொண்டு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையச் செய்யும் நோக்கில் கோயம்புத்தூரில் இருந்து பல்வேறு கைத்தொழில்களை வினைத்திறனாகவும் குறைந்த உற்பத்தி செலவிலும் மேற்கொள்வதற்கு தேவையான பல்வேறு உபகரணங்களும் கருவிகளும் 13ற்கும் மேற்பட்ட நிறுவனங்களால் கொண்டு வரப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

5. 450ற்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் கைத்தொழில் முனைவோர்கள் பயிற்சி பெற பதிவு செய்திருந்ததுடன் அவர்களுக்கு இரண்டு நாள் பயிற்சியும் சான்றிதழ்களும், இயந்திரங்கள் சகாய விலைக்கு, வங்கிகள் மூலமாகவும் ஏனைய நிதி உதவிகள் மூலமாகவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. சந்தைப் படுத்துவதில் இருக்கும் பிரச்சனைகளைத் தீர்க்க ரோட்டரிக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

***